2010 ஏப்ரல் 6]

14—

தொழிற்சாலை

***63556—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. இராஜேந்திரன்

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், அதைப்போல வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் அயோத்தியாப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஓமலூர் வட்டத்திலே காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளிலே மல்லிகை, ரோஜா, சாமந்தி, சம்பங்கி மற்றும் அரளி போன்ற மலர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த மலர்கள் நிரம்பப் பயிரிடப்படுகிற நேரத்தில், தகுந்த விலையும் கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. நிரம்பப் பயிரிடப்படுகிற இந்த மலர்கள்மூலம் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அந்தப் பகுதியிலே தொடங்கினால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதைக்

கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதனைப் பரிசீலிக்க வேண்டுமெனத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் முழுவதும் வாசனைப் பூக்கள் 459 எக்டேர் நிலப் பரப்பில், சுமார் 3,550 மெட்ரிக் டன்கள் விளைகின்றபோதிலும், இவை வீட்டு உபயோகத்திற்கும், கோவில் மற்றும் சடங்குகளுக்கு விற்பனை செய்வதற்கு மட்டுமே போதுமானவையாக உள்ளன. குண்டு மல்லி என்று சொல்லப்படுகிற Jasminum Sambac, முல்லை என்று சொல்லப்படுகின்ற Jasminum atteluatum மற்றும் ஜாதி மல்லி என்று சொல்லப்படுகின்ற Jasminum grandiflorum ஆகிய மலர் வகைகளில் ஜாதி மல்லி மட்டுமே வாசனைத் திரவியம் தயாரிக்க ஏற்றதாக இருக்கும். வாசனைத் திரவியத்திற்கு மல்லிகைப் பூக்களிலிருந்து மெழுகு போன்று தோற்றமளிக்கும் பழுப்பு மஞ்சள் கான்சென்டிரேட், சால்வென்ட் எக்ஸ்டிராக்ஷன் என்ற முறையில் பிரித்து எடுக்கப்படுகிறது. ஒரு டன் ஜாதி மல்லிப் பூக்களிலிருந்து சுமார் 2 கிலோ வாசனைத் திரவியம்தான், அதாவது 0.2 சதவீதம் மட்டுமே கான்சென்டிரேட் தயாரிக்க இயலும். பொருளாதார ரீதியாக இலாபமாக ஒரு தொழிற்சாலையை நிறுவி வாசனைத் திரவியம் தயாரிக்க குறைந்தபட்சம் 300 டன் மல்லிகைப் பூக்கள் வருடத்திற்குத் தேவைப்படுகின்றன. ஆனால், பனமரத்துப்பட்டி பகுதியில் தற்போது பயிரிடப்படும் 225 எக்டேர் நிலப் பரப்பில் வருடத்திற்குத் தோராயமாக 1,800 மெட்ரிக் டன் மல்லிகைப் பூ சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் வாசனைத் திரவியம் தயாரிக்க உகந்த ஜாதி மல்லிப் பூ, அந்தப் பகுதியில் வெறும் ஐந்து ஏக்கர் நிலப் பரப்பில் மட்டுமே வருடத்திற்குப் பயிரிடப்பட்டு, 20 டன் ஜாதி மல்லிப் பூக்கள் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, இப்பகுதியில் வாசனைத் திரவியம் தயாரிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

2010 ஏப்ரல் 6]

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகை பரியிடப்படுவது மட்டுமல்லாமல் ரோஜா, சாமந்தி, சம்பங்கி, அரளி போன்ற மலர்களும் சேலம் மாவட்டம் முழுமையும் பயிரிடப்படுகிற ஒரு சூழல் இருக்கிறது. இங்கே பயிரிடப்படுகிற மலர்கள் பெங்களூருவுக்கும், சென்னைக்கும், பல்வேறு பகுதிகளுக்கும் நாள்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. ஆக, இந்தச் சூழலைக் கருத்திலேகொண்டு, கோவை மாவட்டத்திலே நான்கு, ஐந்து வாசனைத் திரவியத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைப்போல, சேலம் மாவட்டத்திலேயும் ஒரு வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் காரமடை வட்டாரத்தில் 4 வாசனைப் பூ திரவியங்கள் தொழிற்சாலைகளும், மதுரை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையும் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டைப் பகுதியில் 3 வாசனைப் பூ திரவியங்கள் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. ஆர்வமுள்ள தனியார் தொழில்முனைவோர் இப்பகுதியில், சேலம் பகுதியில் மேற்காணும் வாசனைத் திரவியத் தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும்பட்சத்தில் தொழிலகத்திற்கு ஒப்புதல் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை ஒற்றைச் சாளர வழிமுறையில் துரிதமாக வழங்க ஏற்பாடு செய்தல், தொழிலுக்குத் தேவைப்படும் மின்னிணைப்பை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுத் தருதல், வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தருதல் ஆகிய அனைத்து வழிகாட்டுதல்களும் செய்து கொடுத்து, விரைவில் உற்பத்தி தொடங்க, மாவட்டத் தொழில் மையம் வாயிலாக உதவிகள் செய்து தரப்படும். மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22-2-2008 அன்று அறிவிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை, 2008-இன்படி தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மதிப்பில் 15 சதவீத முதலீட்டு மானியம், உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 சதவீத குறைந்த அழுத்த மின்

மானியம் போன்ற சலுகைகளும், தனியார்கள் தொடங்க முன்வந்தால் பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன்மலை இருக்கிறது. சேலம் மாவட்டத்தை ஒட்டியிருக்கின்ற சின்ன கல்வராயன்மலை, பெரிய கல்வராயன்மலையில் கடுக்காய் அதிகமாக விளைகிறது. மருந்துக் குணம் படைத்த கடுக்காயை, மூலப் பொருளாகக் கொண்டு சாயம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *10-00*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி முதல்வர் அவர்கள் அறிவித்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் கொள்கையின்படி தமிழக அரசு எல்லா உதவிகளையும் தனியார்களுக்குச் செய்யும். 15 சதவீத முதலீட்டு மானியம், 36 மாதங்களுக்கு குறைந்த அழுத்த மின் மானியம் மற்றும் பல்வேறு சலுகைகளை, தனியார்கள் முன்வந்தால் இந்த அரசு செய்து தர தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

15—

கிளை அச்சகம்

***62041—திருமதி இளமதி சுப்பிரமணியன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—